**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU.R. RAJAPPA ROUGH STONE QUARRY, SF.NO.1266, LEASE OVER AN EXTENT OF 4.04.5 HA, KAMANDODDI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 14.08.2024 AT 11.00 AM M/s.GVM MAHAL, KURUBARATHAPALLI VILLAGE, SAPPADI POST, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.A.Priyanka I.A.S | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. S.Neelamegam | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Thiru. Rajappa | : | The Proponent,<br>Thiru.R. Rajappa Rough Stone Quarry |
| 5 | Thiru.Uma maheshwaran | : | EIA Consultant,<br>M/s. Geo Technical mining solutions,<br>Dharmapuri |
| | Public | : | 76 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Thiru.R. Rajappa Rough Stone Quarry, SF.No.1266, Lease over an extent of 4.04.5 Ha, Kamandoddi Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get

Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 02.07.2024 and bit notices regarding public hearing was issued to the public of Pillaikothur Village, TMG kotta Village, Periya sappadi Village and Kamandhoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Uma maheshwaran, EIA Consultant, M/s. Geo Technical mining solutions, Dharmapuri of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Mohan Kumar, Pillaikothur Village:**

Thiru. Mohan Kumar has said that, the proposed quarry should be operated without any harm to the public and the local people should be given employment in the quarry.

2. **Tmt. Yesodha and her family, Pillaikothur Village:**

Tmt. Yesodha and her family said that, the public hearing conducting here for this proposed quarry has no relevant to the quarry we are objecting. The announcement regarding this public hearing was not made known in our village. However, they have asked us to inform them if the public hearing is held for the quarry located near our land (Survey No. 759, 760).

3. **Thiru. Suresh, Pillaikothur Village:**

Thiru. Suresh asked to provide the terms and conditions for establishing up a quarry near Patta land. For that, the District Environmental Engineer has informed him to approach the Department of Geology and Mining to get the details.

4. **Thiru. Mallesh, Pillaikothur Village:**

Thiru. Mallesh has said that, there is no problem with the establishing of this proposed quarry project. Further, he requested to give permission for the proposed quarry.

5. **Thiru. Saravanan, Sappadi Village:**

Thiru. Saravanan asked about the norms regarding siting criteria for the establishment of quarry near the canal. To that, the District Environmental Engineer informed them to approach the O/o. District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur to get the details.

6. **Thiru. Ravichandran, Sappadi Village:**

Thiru.Ravichandran has said that, due to blasting carried out in the existing quarries, the nearby canal has been damaged. Further, roads, houses in the

Sappadi village have also been affected due to blasting. He also said that, the nearby agricultural lands have been affected by the dust emanating from the quarry.

7. **Thiru. Muniraj, Sappadi Village:**

Thiru.Muniraj has said that, announcement regarding public hearing was made at Sappadi village and due to safe blasting carried out in the proposed quarry, there would be no harm to the public. Therefore, he requested to give approval for the proposed project.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 2 number of petitions were received on the proposed Thiru.R. Rajappa Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is one written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project and no email representation was received in the O/o. O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Hosur | Sub Collector<br>Hosur | District Collector<br>Krishnagiri |
|---|---|---|

**திரு. R. ராஜப்பா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.1266, காமன்தொட்டி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.04.5 ஹெக்டேர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 14.08.2024 அன்று குருபரத்தப்பள்ளி கிராமம், சப்படி அஞ்சல் ,சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். GVM மஹால், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.A. பிரியங்கா I.A.S | : | சார் ஆட்சியர், ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.சி. நீலமேகம் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. R. ராஜப்பா | : | உரிமையாளர்<br>திரு. R. ராஜப்பாரப்ஸ்டோன்குவாரி |
| 5 | திரு. உமா மகேஸ்வரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஜீயோ டெக் மைனிங் சொலியுசன்ஸ்,<br>தருமபுரி. |
| | பொதுமக்கள் | : | 76 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. R. ராஜப்பா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஒசூர், பொது மக்கள் மற்றும் திரு. R. ராஜப்பா ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 02.07.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், பிள்ளைக்கொத்தூர் கிராமம், TMG கோட்டா கிராமம், பெரியசப்படி கிராமம், காமன்தொட்டி கிராமம்ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஒசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு. R. ராஜப்பாரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின்

உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. R. ராஜப்பாரப்ஸ்டோன்குவாரிநிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.உமா மகேஸ்வரன், ஜீயோ டெக் மைனிங் சொலியுசன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. மோகன் குமார், பிள்ளைக்கொத்தூர் கிராமம்:**

திரு. மோகன்குமார் அவர்கள், பொது மக்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி இக்குவாரியை இயக்க வேண்டும் என்றும், உள்ளூர் மக்களுக்கு குவாரியில் வேலைவாய்ப்பு அளித்திட வேண்டுமென்று கூறினார்.

2. **திருமதி.யசோதா மற்றும் குடும்பத்தினர்,சப்படிகிராமம்:**

திரு. யசோதா மற்றும் குடும்பத்தினர்அவர்கள், இங்கு நடைபெறும் கருத்து கேட்பு கூட்டத்திற்கு உரிய குவாரிக்கும் நாங்கள் ஆட்சேபம் தெரிவிக்கும் குவாரிக்கும் தொடர்பு இல்லை என்றும் இக்கூட்டம் தொடர்பான அறிவிப்புகள் எங்கள் பகுதியில் தெரியபடுத்தப்படவில்லை என்று கூறினார். இருப்பினும், எங்கள் நிலத்திற்கு அருகே உள்ள குவாரிக்கு (சர்வே எண். 759, 760) கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் போது எங்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

3. **திரு . சுரேஷ், பிள்ளைக்கொத்தூர் கிராமம்:**

திரு. சுரேஷ் அவர்கள், பட்டா நிலத்திற்கு அருகில் குவாரி அமைக்க உள்ள விதிமுறைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், கனிம வளத்துறை அலுவலகத்தை அணுகுமாறு தெரிவித்தார்.

4. **திரு . மல்லேஷ், பிள்ளைக்கொத்தூர் கிராமம்:**

திரு. மல்லேஷ் அவர்கள், இக்குவாரி திட்டம் அமைவதால் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும். பொது மக்களுக்கு பாதிப்பின்றி குவாரியை இயக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

5. **திரு. சரவணன், சப்படி கிராமம்:**

திரு. சரவணன் அவர்கள், குவாரியின் அமைவிடம் கால்வாயிலிருந்து எவ்வளவு தொலைவில் அமைய வேண்டும் என்ற விதிமுறைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அலுவலகத்தை அணுகுமாறு தெரிவித்தார்.

**6. திரு. ரவிச்சந்திரன்,சப்பபடி கிராமம்:**

திரு. ரவிச்சந்திரன் அவர்கள், ஏற்கனவே அமைந்துள்ள குவாரியில் வெடி வைப்பதன் காரணமாக அருகிலுள்ள கால்வாய் பாதிப்படைந்து உள்ளது என்றும் சப்பபடி கிராமத்தில் சாலைகள், வீடுகள் ஆகியவை அதிகளவில் பாதிப்படைந்துள்ளதாக கூறினார். மேலும், குவாரியிலிருந்து எழும்பும் தூசுகளால் அருகிலுள்ள விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார்.

**7. திரு. முனிராஜ், சப்பபடி கிராமம்:**

திரு. முனிராஜ் அவர்கள், இக்குவாரியின் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான அறிவிப்புகள் சப்பபடி கிராமத்தில் செய்யப்பட்டன என்றும், குவாரியில் பாதுகப்பான முறையில் வெடி வைப்பதன் காரணமாக எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும். எனவே, இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி வழுங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. R. ராஜப்பா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 2 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. R. ராஜப்பா உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக ஒரு மனுவானது

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் பெறப்பட்டது. மேலும், மின்னஞ்சல் மூலமாக எவ்வித புகாரும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

21/8/2024
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**
21/08/2024

21/8/24
**சார் ஆட்சியர்**
**ஓசூர்**
5/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**
5/7